செ.வெ.எண் : 17/ ஜூலை நாள் : 16.07.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## மண்டபம், குந்துகால், இராமேஸ்வரம் மற்றும் மூக்கையூர் பகுதியில் மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் மீனவர்களிடம் குறைகளை கேட்டறிந்து மீன்பிடி இறங்குதளத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம், குந்துகால், இராமேஸ்வரம் மற்றும் மூக்கையூர் பகுதியில் இன்று (16.07.2021) மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள், மீனவர்களிடம் குறைகளை கேட்டறிந்து மீன்பிடி இறங்குதளத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆணையர் முனைவர்.மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் ஆட்சியர்/ மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பிரவீன்குமார்,இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் (இராமநாதபுரம்), திரு.செ.முருகேசன் அவர்கள் (பரமக்குடி), உட்பட பலர் உடனிருந்தனர்.

தொடர்ந்து, மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் மீனவர்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் தந்து அவர்கள் வாழ்கை தரம் உயர்வு பெற வழிவகை செய்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் வருகின்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் மீனவர்களுக்கான குறைகளை நிவர்த்தி செய்து அவர்களின் வாழ்வு மேலும் உயர்வு பெறும் வகையில் பல்வேறு சலுகைகள் அளிப்பதற்காக மீனவ கிராமங்களுக்கு நேரடியாக சென்று ஆய்வு நடத்தி அவர்கள் குறைகளையும், கோரிக்கை மனுக்களையும் பெற்று தெரிவிக்குமாறு அறிவுறுத்தினார்கள். அதன்படி நான் இன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மண்டபம், குந்துகால் மற்றும் இராமேஸ்வரம் மற்றும் மூக்கையூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நேரடியாக சென்று மீனவ மக்களை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறியப்பட்டது.

தமிழக முதலமைச்சர் அவர்கள் தான் முதல்வராக பொறுப்பேற்ற போது தமிழகத்தில் கொரானா நோய் தாக்காம் அதிகம் காணப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மேற்கொண்ட சிறந்த நடவடிக்கையினால் கொரானா நோயின் தாக்கம் படிப்படியாக குறைந்து தற்போது மிகவும் குறைந்த நிலையில் உள்ளது. தற்போது உள்ள சூழ்நிலையில் மீனவர்களின் வாழ்வு வளம்பெற அரசு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. மீனவர்களின் கோரிக்கையினை ஏற்று இப்பகுதிகளில் தூண்டில் வளைவு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் குந்துகாள் மீன்பிடி இறங்கு தளம் துறைமுகம் அளவில் உயர்த்தவும், இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகம் தரம் உயர்த்துவதற்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும். மீன்பிடி தடைகாலத்தில் நிவாரணம் உயர்த்தி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மீனவர்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணங்கள் கிடைக்கவும், மீன் ஏற்றுமதிக்கு தேவையான சேமிப்பு கிடங்கு வசதிகளையும் ஏற்படுத்தவும் மேலும் திருநெல்வேலி, கன்னியாகுமரி தூத்துக்குடி பகுதிகளில் உள்ள மீனவர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 25 விலையில் 300 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. அதைபோல் இப்பகுதிகளில் உள்ள மீனவர்களுக்கான

டீசலுக்கான விலை நிர்ணயம் செய்ய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இராமேஸ்வரம் பகுதிகளில் என்னென்ன வசதிகள் ஏற்படுத்தி தர முடியும் என ஆய்வு செய்து மீனவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்து தர நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும் இப்பகுதியில் மீன்வளக்கல்லூரி அமைப்பதற்கான இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். மீனவர்களுக்கான இட ஒதுக்கீடுகள் இக் கல்லூரிகளில் அதிகப்படுத்தவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்தார்.

அதை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை முன்னேற்றம் சார்ந்த ஆலோசனை கூட்டம் மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளின் போது, இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் (பொறுப்பு) திரு.சி.இரவிச்சந்திரன், மீன்வளத்துறை துணை இயக்குநர் திரு. இளம்வழுதி, உதவி இயக்குநர் திரு.கோபிநாத் உட்பட பலர் கலந்து கொண்டனார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**